# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2358/11 - 2023 නොවැම්බර් මස 13 වැනි සඳුදා - 2023.11.13

2358/11 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: HR/LD/3/1/546.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/11/2016/UDA/433.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தின், ஹொரண பிரதேச செயலாளர் பிரிவில், பஹல மில்லேவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 530214-10-1 இல் காட்டப்பட்ட காணித் துண்டுகள் இல. 1 முதல் 8 வரை 3.3990 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட கீழ் விபரிக்கப்படும் (8) காணித் துண்டுகளின் விபரம் பின்வருமாறு:

1. துண்டு இல. 1

காணியின் பெயர்: மீதென்பென்னகந்த ஹேவத் மில்லேவ வத்தை; விபரம்: விளையாட்டு மைதானம்; உரிமை கோருநர்: அரசு; ஆரம்ப உரிமை கோருநர்: கண்டுபிடிக்க முடியவில்லை, கொட்டகல தோட்ட நிறுவனத்தினுடையது; விஸ்தீரணம்: 0.6708 ஹெக்டயார்.

2. துண்டு இல. 2

காணியின் பெயர்: - ; விபரம்: வீதி; உரிமை கோருநர்: அரசு; ஆரம்ப உரிமை கோருநர்: கண்டுபிடிக்க முடியவில்லை, கொட்டகல தோட்ட நிறுவனத்தினுடையது; விஸ்தீரணம்: 0.0886 ஹெக்டயார்.

3. துண்டு இல. 3

காணியின் பெயர்: மீதென்பென்னகந்த ஹேவத் மில்லேவ வத்தை; விபரம்: வீட்டுத்தோட்டம், 20 - 25 வயதுடைய கலப்பு வீட்டுத் தோட்டம், நிரந்தர கட்டிடம் மற்றும் 9 மலசலகூடங்கள் உள்ளது; உரிமை கோருநர்: அரசு; ஆரம்ப உரிமை கோருநர்: கண்டுபிடிக்க முடியவில்லை, கொட்டகல தோட்ட நிறுவனத்தினுடையது; விஸ்தீரணம்: 0.4077 ஹெக்டயார்.

4. துண்டு இல. 4

காணியின் பெயர்: மீதென்பென்னகந்த ஹேவத் மில்லேவ வத்தை; விபரம்: கோயில், நிரந்தரக் கட்டிடம் 4 மற்றும் சீமெந்தினால் கட்டப்பட்ட கிணறு ஒன்று உள்ளது; உரிமை கோருநர்: அரசு; ஆரம்ப உரிமை கோருநர்: கண்டுபிடிக்க முடியவில்லை, கொட்டகல தோட்ட நிறுவனத்தினுடையது; விஸ்தீரணம்: 0.3914 ஹெக்டயார்.

5. துண்டு இல. 5

காணியின் பெயர்: மீதென்பென்னகந்த ஹேவத் மில்லேவ வத்தை; விபரம்: வீட்டுத் தோட்டம், 0 - 5 வயதுடைய கலப்பு வீட்டுத் தோட்டம்; உரிமை கோருநர்: அரசு; ஆரம்ப உரிமை கோருநர்: கண்டு பிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 0.2324 ஹெக்ட யார்.

6. துண்டு இல. 6

காணியின் பெயர்: மீதென்பென்னகந்த ஹேவத் மில்லேவ வத்தை; விபரம்: வீட்டுத்தோட்டம், 10 - 15 வயதுடைய கலப்பு வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடம் 2 மற்றும் 4 மலசலகூடங்கள் மற்றும் கிணறு ஒன்று உள்ளது; உரிமை கோருநர்: அரசு; ஆரம்ப உரிமை கோருநர்: கண்டுபிடிக்க முடியவில்லை, கொட்டகல தோட்ட நிறுவனத்தினுடையது; விஸ்தீரணம்: 0.8881 ஹெக்டயார்.

7. துண்டு இல. 7

காணியின் பெயர்: மீதென்பென்னகந்த, நாகந்தல லந்த ஹேவத் மில்லேவ வத்தை; விபரம்: வீட்டுத் தோட்டம், 10 - 15 வயதுடைய கலப்பு வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடம் 4 மற்றும் 14 மலசல கூடங்கள் மற்றும் கிணறு ஒன்று உள்ளது; உரிமை கோருநர்: அரசு; ஆரம்ப உரிமை கோருநர்: கண்டு பிடிக்க முடியவில்லை, கொட்டகல தோட்ட நிறுவனத் தினுடையது; விஸ்தீரணம்: 0.6994 ஹெக்டயார்.

8. துண்டு இல. 8

காணியின் பெயர்: மீதென்பென்னகந்த, ஹேவத் மில்லேவ வத்தை; விபரம்: வீட்டுத்தோட்டம், 10 - 15 வயதுடைய கலப்பு வீட்டுத் தோட்டம் உள்ளது; உரிமை கோருநர்: அரசு; ஆரம்ப உரிமை கோருநர்: கண்டுபிடிக்க முடியவில்லை, கொட்டகல தோட்ட நிறுவனத்தினுடையது; விஸ்தீரணம்: 0.0206 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஹொரணை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உரிமை கோருவதற்கு உதவும் அனைத்து உரிமைப்பத்திரம் மற்றும் ஏனைய ஆவணங்கள் பரிசீலனை மேற்கொள்ளும் போது என் முன் வைக்கப்பட வேண்டும்.

கே. டீ. எஸ். சஜீவனா,
பிரதேச செயலாளர்,
ஹொரணை.

பிரதேச செயலகம்,
ஹொரணை,
2023, நவெம்பர் 02.

EOG 11 - 0131

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: ඉ/02/34/8/03.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 03J/92/FR/304.

காணி எடுத்தற் சட்டத்தின் 07 ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு 2296/20 ஆம் இலக்கமும் 2022.09.08 ஆந் திகதியுமுடைய அதி விசேட வர்த்தமானியில் 1A ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப் பட்டுள்ள அறிவித்தலின் திகதியானது 2022.12.12 எனவும் நேரம் மு. ப. 10.00 மணி எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் அது 2024.01.08 ஆந் திகதி எனவும் நேரம் மு. ப. 10.00 மணி எனவும் திருத்தப்படல் வேண்டும் என்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

சஞ்ஜீவனீ கன்டம்பி,
பிரதேச செயலாளர்,
கலவான.

பிரதேச செயலகம்,
கலவான,
2023, நவெம்பர் 09.

EOG 11 - 0132